# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 146 | உள்ளூர் - 26.05.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 146 | வெளியூர் - 27.05.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



Ours bank with Bank of Baroda





**வீட்டில் நிம்மதி வேண்டுமா..?** | **இந்திய இராணுவத்தில் 190 காலியிடங்கள்!** | **டெண்டர்கள் பரிசீலனை இனி ஆன்லைனில்!** | **திரையரங்குகளில் இனி 5 காட்சிகள்..!**

## 66 பேருக்கு மத்திய அரசின் பத்ம விருதுகளை வழங்கினார் ஜனாதிபதி!



புதுடெல்லி, மே. 26–

புதுடெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் 2026–ஆம் ஆண்டிற்கான முதற்கட்ட பத்ம விருதுகள் வழங்கும் விழா மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது.

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட பல முக்கியத் தலைவர்கள் முன்னிலையில் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட மொத்த 131 விருதுகளில், இன்று முதற்கட்டமாக 2 பத்ம விபூஷன், 6 பத்ம பூஷன் மற்றும் 58 பத்மஸ்ரீ விருதுகளை மேதகு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சாதனையாளர்களுக்கு நேரில் வழங்கினார். பாலிவுட் சினிமா ஜாம்பவான் நடிகர் தர்மேந்திராவின் விருதை அவரது மனைவி ஹேமமாலினி கண்ணீருடன் பெற்றார் மற்றும் இந்தியாவின் புகழ்பெற்ற ஹிந்துஸ்தானி கிளாசிக்கல் வயலின் கலைஞர் செல்வி. என். ராஜம் ஆகியோர் பத்ம விபூஷன் விருதுகளை பெற்றனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவர் கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசுவாமி பத்ம விபூஷண் விருதை பெற்றுக்கொண்டார்.

பத்ம ஸ்ரீ விருதை பெற்றுக்கொண்டார் இந்திய மகளிர் கிரிக்கெட் அணி கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர்.

## 12 ஆண்டுகள் புதிய இந்தியாவின் பாதையில் மோடி!




புதுடெல்லி, மே. 26–

பிரதமர் மோடி ,2014 மே 26 அன்று முதன்முறையாக இந்திய பிரதமராக பதவியேற்றார். 2025 மே 26 அன்று அவர் 11 ஆண்டுகளை நிறைவு செய்தார். அதன்படி, இன்று (2026 மே 26) அவர் பிரதமராக 12 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார்.

இந்த 12 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு பல்வேறு பாஜக தலைவர்கள் மற்றும் மாநில முதல்வர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். குறிப்பாக, Yogi Adityanath, மோடியின் தலைமையில் கடந்த 12 ஆண்டுகள் நல்லாட்சி, நலத்திட்டங்கள் மற்றும் மக்கள் அதிகாரமளிப்பில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியதாக பாராட்டியுள்ளார்.

**முக்கிய தகவல்கள்**

முதல் பதவியேற்பு: 26 மே 2014

இரண்டாவது பதவியேற்பு: 30 மே 2019

மூன்றாவது பதவியேற்பு: 9 ஜூன் 2024

2026 மே 26: பிரதமராக 12 ஆண்டுகள் நிறைவு

## "முதல்வர் விஜயின் டெல்லி மிஷன் ஆரம்பம்"




சென்னை, மே. 26–

தமிழ்நாடு முதல்வர் சி. ஜோசப் விஜய் மே 27, 2026 (புதன்கிழமை) அன்று தனது முதல் அதிகாரப்பூர்வ டெல்லி பயணத்தை மேற்கொள்கிறார்.

**பயணத்தின் நோக்கம்**

1. நிலுவையில் உள்ள மத்திய நிதி மற்றும் திட்ட உதவிகள் குறித்து மனு சமர்ப்பிக்க

2.மீனவர்கள் பிரச்சினை தொடர்பான விவாதம்

3.அடிப்படை வசதி திட்டங்கள் மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்கள் குறித்து ஆலோசனை

**சந்திக்க உள்ள தலைவர்கள்**

ஜனாதிபதி திரௌபதி முர்மு

பிரதமர் நரேந்திர மோடி

உள்துறை அமைச்சர் அமித் ஷா

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே

ராகுல் காந்தி

சோனியா காந்தி

**டெல்லி ஏற்பாடுகள்**

தமிழ்நாடு அரசு விருந்தினர் இல்லம் மற்றும் தமிழ்நாடு ஹவுஸ் ஆகிய இடங்களில் முதல்வருக்கான அறைகள் மற்றும் மாநாட்டு அரங்கம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

## எம்.எல்.ஏ. எண்ணிக்கையை அதிகரிக்க பா.ஜ., பாணியில் களமிறங்கிய த.வெ.க.!



சென்னை, மே. 26–

முதல்வர் விஜய் தலைமையிலான த.வெ.க., அரசுக்கு ஆதரவளித்த அ.தி.மு.க., அதிருப்தி எம்.எல்.ஏ.,க்களில் மூன்று பேர், நேற்று பதவியை ராஜினாமா செய்து விட்டு, த.வெ.க.,வில் இணைந்துள்ளனர். ஏற்கனவே, முதல்வர் விஜய் ராஜினாமா செய்ததால், காலியாக உள்ள திருச்சி கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல் நடக்க உள்ளது.

அத்துடன் மேலும் பல தொகுதிகளுக்கு இடைத்தேர்தலை வர வைத்து, த.வெ.க., எம்.எல்.ஏ.,க்கள் எண்ணிக்கையை அதிகரிக்க, அக்கட்சி திட்டம் தீட்டியுள்ளதாக கூறப்படுகிறது. அதன் ஒரு பகுதி தான், மூன்று எம்.எல்.ஏ.,க்களின் ராஜினாமா என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

மத்தியில் நீண்ட காலம் ஆட்சியிலிருந்த காங்கிரஸ், எதிர்க்கட்சி ஆளும் மாநில அரசுகளை பலமுறை கவிழ்த்து இருக்கிறது. கட்சி தாவல் தடைச்சட்டம் அமலுக்கு வந்த பின், மூன்றில் இரு பங்கு எம்.எல்.ஏ.,க்கள் இருந்தால் தான் கட்சி மாற முடியும் என்ற நிலை வந்தது.

இதனால், எம்.எல்.ஏ.,க்களை ராஜினாமா செய்ய வைக்கும் வழி தொடங்கியது. கடந்த 2019ல் கர்நாடகாவில், காங்., -- எம்.எல்.ஏ.,க்கள் 17 பேர் ராஜினாமா செய்து விட்டு, பா.ஜ.,வில் இணைந்தனர். இதனால், காங்., ஆதரவில் முதல்வராக இருந்த குமாரசாமி ஆட்சி கவிழ்ந்து, எடியூரப்பா தலைமையில் பா.ஜ., ஆட்சி அமைந்தது. இதுபோல, கடந்த 2020ல் ம.பி.,யில், 22 காங்., -- எம்.எல்.ஏ.,க்கள் ராஜினாமா செய்து பா.ஜ.,வில் இணைந்ததால், கமல்நாத் தலைமையிலான காங்., அரசு கவிழ்ந்து, பா.ஜ., ஆட்சிக்கு வந்தது. இடைத்தேர்தலில் பா.ஜ., வெற்றி பெற்று, எம்.எல்.ஏ.,க்கள் எண்ணிக்கையை அதிகரித்து கொண்டது. மத்தியில் அதிகாரத்தில் இருக்கும் கட்சிகள் செய்து வந்ததை, மாநிலத்தில் அதிகாரத்தில் இருக்கும் த.வெ.க.,வும் தொடங்கி இருப்பது, கடும் விமர்சனத்தை ஏற்படுத்தி உள்ளது.

## தமிழகத்தில் பள்ளிகள் திறப்பு எப்போது?



சென்னை, மே. 26–

தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து ஜூன்1–ந்தேதி பள்ளிகள் திறக்கப்படும் என முன்னதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் கடுமையான வெயில் காரணமாக பள்ளிகள் திறப்பை தள்ளிவைக்க வேண்டும் என சில கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பில் இருந்து கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சரிடம் கேட்டபோது, ''ஜூன் முதல் வாரத்தில் வெப்ப அலை இருக்குமா? என வானிலை துறையிடம் கேட்டு, அதன் பிறகு முதல்–அமைச்சர் விஜய்யிடம் ஆலோசித்து பள்ளி திறப்பு தேதி அறிவிக்கப்படும்.'' என்று கூறி இருந்தார்.

இந்த நிலையில், பள்ளிகள் திறப்பு குறித்து முதல்–அமைச்சர் விஜய் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் உள்ளிட்டோரிடம் முதல்–அமைச்சர் ஆலோசனை நடத்தி வருகிறார். இந்த ஆலோசனைக்கு பின்னர் பள்ளிகள் திறப்பு குறித்த அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## "பேச்சுவார்த்தை ஒருபுறம்... தாக்குதல் மறுபுறம்..!"

# ஹார்முஸ் அருகே புதிய பதற்றம்..! ஈரான் மீது அமெரிக்கா அதிரடி..!

## "தோஹா பேச்சுவார்த்தைக்கு பின்னடைவு..?"




வாஷிங்டன், மே. 26–

மத்திய கிழக்கில் மீண்டும் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது. உலகின் மிக முக்கியமான எண்ணெய் போக்குவரத்து வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தி அருகே, தெற்கு ஈரானில் உள்ள ஏவுகணை தளங்கள் மற்றும் கண்ணிவெடி பதிக்கும் படகுகளை குறிவைத்து அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த நடவடிக்கை "தற்காப்பு தாக்குதல்" என அமெரிக்க மத்திய கட்டளை (CENT–COM) விளக்கம் அளித்துள்ளது. ஈரானின் பந்தர் அப்பாஸ் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெடிச்சத்தங்கள் கேட்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தாக்குதலில் சில ஈரான் புரட்சிகர காவல்படை (IRGC) வீரர்கள் உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த தாக்குதல் நடைபெற்ற நேரத்திலேயே, கத்தார் தலைநகர் தோஹாவில் அமெரிக்கா – ஈரான் இடையேயான அமைதி பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தன. ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் முழுமையாக திறப்பது, கப்பல் போக்குவரத்தை சீரமைப்பது மற்றும் பிராந்திய பதற்றத்தை குறைப்பது குறித்து இருதரப்பும் ஆலோசனை நடத்தி வந்த நிலையில் இந்த தாக்குதல் பேச்சுவார்த்தைக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில், பேச்சுவார்த்தை தொடரும் என்றும், தூதரக வழியே தீர்வு காண்பதே முதன்மை நோக்கம் என்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. இருப்பினும், ஹார்முஸ் பகுதியில் நிலவும் பதற்றம் காரணமாக உலக எண்ணெய் சந்தை மற்றும் சர்வதேச கப்பல் போக்குவரத்தில் மீண்டும் கவலை அதிகரித்துள்ளது.

மொத்தத்தில், தோஹா அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்று கொண்டிருக்கும் சூழலிலேயே அமெரிக்காவின் புதிய ராணுவ நடவடிக்கை, அமெரிக்கா – ஈரான் உறவில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தி, மத்திய கிழக்கு பிராந்தியத்தின் எதிர்கால நிலைமை குறித்து உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

## மகளிர் உரிமைத்தொகையை ரூ.2,500 ஆக உயர்த்த அரசு தீவிர ஆலோசனை?



சென்னை, மே. 26–

தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டத்தை முழுமையாக மறுசீரமைத்து, அதற்கு 'மதிப்புமிகு மகளிர் திட்டம்' எனப் புதிய பெயரிட விஜய் தலைமையிலான த.வெ.க. முடிவு செய்துள்ளது.

முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாளான ஜூன் 22 முதல் ரூ.2.500 மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்க த.வெ.க. திட்டமிட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்தத் தகவல் தமிழகப் பெண்கள் மத்தியில் ஒரு புதிய நம்பிக்கையையும், பெரும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் தலைவர் தீரஜ் ஜி. இந்துஜா சந்தித்துப் பேசினார்.

## டெண்டர்கள் பரிசீலனை இனி ஆன் லைனில்!




சென்னை, மே. 26–

நகராட்சி டெண்டர்கள் முன்வைப்பு தொகை மற்றும் பாதுகாப்பு தொகையை ஆன்லைன் முறையில் மட்டுமே பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் டெண்டர்கள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் இணையதளம் வாயிலாக நடைபெறும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநரக கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், டெண்டர் நடைமுறைகளிலும், கட்டட திட்ட அனுமதிகளிலும் முறையான சட்டவிதிகளை பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், டெண்டர் செயல்முறைகளில் விண்ணப்பதாரர்களின் விவரங்களை முன்கூட்டியே அறியும் வாய்ப்புள்ள கள ஆய்வு சான்று மற்றும் உபகரணங்களின் இருப்பு சான்றை கட்டாயம் கேட்கக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்வைப்பு தொகை மற்றும் பாதுகாப்பு தொகையை ஆன்லைன் முறையில் மட்டுமே பெற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களை தேவையின்றி நேரில் வரவழைக்கப்படக் கூடாது என்றும் கட்டட அனுமதி தொடர்பான விண்ணப்பங்கள் மீது உரிய காலத்தில் நடவடிக்கை வேண்டும் எனவும் ககன் தீப் சிங் பேடி உத்தரவிட்டுள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 26.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 12-ம் தேதி

# எபோலா; இந்தியர்கள் என்ன செய்ய வேண்டும்..?




ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் தொடர்ந்து பரவி வரும் எபோலா நோயை, 'சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பொது சுகாதார அவசரநிலை' (PHEIC) என உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிவித்துள்ளது. ஜனநாயகக் குடியரசு காங்கோ (DRC) மற்றும் உகாண்டா ஆகிய நாடுகளில் இந்நோய் பரவியதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எபோலா வைரஸின் 'புண்டிபுக்யோ' (Bundibugyo) வகையின் பரவல் குறித்த கவலைகள் அதிகரித்து வந்த நிலையில், 2005–ஆம் ஆண்டின் 'சர்வதேச சுகாதார விதிமுறைகளின்' (IHR) கீழ், மே 17 அன்று இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்தியாவின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையின்படி, 'ஆப்பிரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களும்' (Africa CDC) இந்த நோய்ப்பரவலை 'கண்ட அளவிலான பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான பொது சுகாதார அவசரநிலை' (PHECS) என வகைப்படுத்தியுள்ளன.

"ஜனநாயகக் குடியரசு காங்கோ மற்றும் உகாண்டா ஆகிய நாடுகளைப் பாதித்து வரும், புண்டிபுக்யோ வகை எபோலா வைரஸ் நோயின் தற்போதைய பரவலை, 'கண்ட அளவிலான பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான பொது சுகாதார அவசரநிலை' (PHECS) என ஆப்பிரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் (Africa CDC) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன," என்று சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

எபோலா நோய் என்பது, எபோலா வைரஸ் தொற்றால் ஏற்படும் ஒரு தீவிரமான வைரஸ் ரத்தப்போக்கு காய்ச்சல் (viral haemorrhagic fever) ஆகும். தற்போதைய நோய்ப்பரவல், 'புண்டிபுக்யோ' வகையைச் சார்ந்ததாகும்; இது கடுமையான நோயை ஏற்படுத்தக்கூடியது என்பதோடு, அதிக இறப்பு விகிதத்தையும் கொண்டது என அறியப்படுகிறது.

புண்டிபுக்யோ வகையால் ஏற்படும் எபோலா நோயைத் தடுக்கவோ அல்லது சிகிச்சையளிக்கவோ, தற்போது அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளோ அல்லது குறிப்பிட்ட சிகிச்சை முறைகளோ ஏதும் இல்லை என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். "இது அதிக இறப்பு விகிதம் கொண்ட ஒரு தீவிரமான நோயாகும். புண்டிபுக்யோ வைரஸால் ஏற்படும் எபோலா நோயைத் தடுக்கவோ அல்லது சிகிச்சையளிக்கவோ இதுவரை எந்தத் தடுப்பூசிகளோ அல்லது குறிப்பிட்ட சிகிச்சை முறைகளோ அங்கீகரிக்கப்படவில்லை," என்று அதிகாரப்பூர்வ அறிக்கை கூறுகிறது.

**எந்தெந்த நாடுகள் அதிக ஆபத்தில் உள்ளன?**

இந்த அறிவுறுத்தலின்படி, ஜனநாயகக் குடியரசு காங்கோ மற்றும் உகாண்டா ஆகிய நாடுகளின் எல்லைகளையொட்டி அமைந்துள்ள நாடுகள், நோய் பரவும் அபாயம் அதிகம் உள்ள நாடுகளாகக் கருதப்படுகின்றன. தெற்கு சூடான், அண்டை நாடுகளில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள நாடுகளில் ஒன்றாகச் சிறப்பாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

**இந்தியாவில் பாதிப்பா..?**

புண்டிபுக்யோவைரஸ் வகையுடன் தொடர்புடைய எபோலா நோய் பாதிப்புச் சம்பவங்கள் எதையும் இந்தியா இதுவரை பதிவு செய்யவில்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. "புண்டிபுக்யோவைரஸ் வகையினால் ஏற்படும் எபோலா நோய் பாதிப்புச் சம்பவங்கள் எதையும் இந்தியா பதிவு செய்யவில்லை," என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குடிமக்களுக்கு இந்தியா அறிவுறுத்தல்**

பாதிக்கப்பட்ட ஆப்பிரிக்க நாடுகளில் மாறிவரும் சுகாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு, மறு அறிவிப்பு வரும் வரை, காங்கோ ஜனநாயகக் குடியரசு, உகாண்டா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு இந்திய அரசு தனது குடிமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

"உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) பரிந்துரைகளுக்கு இணங்க, காங்கோ ஜனநாயகக் குடியரசு, உகாண்டா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு இந்திய அரசு தனது குடிமக்கள் அனைவருக்கும் அறிவுறுத்துகிறது," என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த நாடுகளில் வசித்து வருபவர்கள் அல்லது இந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்பவர்களான இந்தியக் குடிமக்கள், உள்ளூர் அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ள பொது சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறும், கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# தமிழக சட்டசபையில் 4 தொகுதிகள் காலி!

சென்னை. மே. 26–

அதிமுக எம்எல்ஏக்கள் 3 பேர் ராஜினாமா செய்த நிலையில், மேலும் 3 தொகுதிகள் காலியானதாக சட்டசபை செயலகம் அறிவித்தது. மொத்தம் 4 தொகுதிகள் காலியாக உள்ளன.



தவெக தலைவரான விஜய், அண்மையில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் வேட்பாளராக போட்டியிட்டார். இரண்டு தொகுதிகளில் அவர் வெற்றி பெற்றார். முதல்வராக பொறுப்பேற்பதற்கு முன்னர், திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை அவர் மே 10ம் தேதி ராஜினாமா செய்தார். இதன் பிறகு அந்த தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது.

தற்போது அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் வேலுமணி கோஷ்டியைச் சேர்ந்த மூன்று எம்.எல்.ஏ.க்கள் நேற்று திடீரென தங்கள் எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்ததுடன், ஆளும் கட்சியான த.வெ.க.,வில் ஐக்கியமாகினர். இதனால் மதுராந்தகம், தாராபுரம், பெருந்துறை ஆகிய 3 சட்டசபை தொகுதிகள் காலியானதாக சட்டசபை செயலகம் அறிவித்துள்ளது,

தொகுதி காலி என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு உள்ளதால் அங்கு 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்த வேண்டும் என்பது விதியாகும். எனவே கூடிய விரைவில் முறையான அறிவிப்பை தேர்தல் கமிஷன் வெளியிட இருக்கிறது. தற்போது தமிழகத்தில் நடந்து கொஞ்ச நாட்களிலேயே 4 தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இதனால் இந்த தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்த வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

# சரிந்து வரும் சாம்ராஜ்யத்தை காப்பாற்ற எங்கள் மீது பழி; எடப்பாடி பழனிசாமிக்கு தவெக பதிலடி!

சென்னை, மே. 26–

தமிழக சட்டசபை தேர்தலில் தவெக அதிக இடங்களில் வெற்றிபெற்றது. பின்னர், காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்டுகள், ஐயூஎம்எல் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் தவெக ஆட்சி அமைத்தது.






தேர்தலுக்குப்பின் அதிமுகவில் பிளவு ஏற்பட்டுள்ளது. எடப்பாடி தரப்பு, எஸ்.பி.வேலுமணி தரப்பு என இரு பிரிவுகளாக பிரிந்தது. இதனிடையே, அதிமுகவை சேர்ந்த 3 எம்.எல்.ஏ.க்கள் நேற்று தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தனர். இந்த நிகழ்வு தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை, இந்த நிகழ்வை சுட்டிக்காட்டி தமிழ்நாட்டில் கீழ்த்தரமான அரசியலை, குதிரை பேர கலாசாரத்தை தவெக அறிமுகப்படுத்தியுள்ளதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார்.

இந்நிலையில், எடப்பாடி பழனிசாமி விமர்சனத்திற்கு தவெக பதிலடி கொடுத்துள்ளது. இது தொடர்பாக தவெக தகவல் தொழில்நுட்பப்பிரிவின் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில்,

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் ராஜினாமா கடிதத்தை "தலைமைச் செயலகத்தில்" சபாநாயகரிடம்தான் கொடுக்க முடியும் என்பதைக்கூட அறியாத ஒருவர், ஏற்கனவே பல முறை ஆட்சி செய்த கட்சியின் பொதுச்செயலாளராக இருக்கிறார் என்பதை எண்ணி தமிழக மக்கள் எள்ளி நகையாடுகிறார்கள்.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டுமெனில் சட்டமன்றச் செயலகத்திற்குத்தான் (Secretariat) வர வேண்டும். அதுதான் ஜனநாயகம் வகுத்த வழிமுறை. இந்த அடிப்படை தெரியாமல் உளர வேண்டியது..

**தொடர் தோல்வி**

தொடர் தோல்விகளால் "எரியுதடி மாலா" என புலம்ப வேண்டாம். சரிந்து வரும் உங்கள் அரசியல் சாம்ராஜ்யத்தை எங்களின் மீது பழிபோட்டு காப்பாற்ற முடியாது!

ஒரு பலவீனமான தலைமை, தன் தோல்வியை மறைப்பதற்காக அரசு மீதும் நமது கழகத்தின் மீதும் பழி போடுகிறது. உங்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே உங்கள் மீது நம்பிக்கை இல்லை. தொடர்ந்து தோல்விகளை மட்டுமே சந்தித்து வரும் ஒரு தலைமையின் கீழ் இருக்க விரும்பாமல், தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் நமது தலைவரின் ஆற்றலை மதித்து, மக்கள் சேவை செய்ய அவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் வந்து இணைந்துள்ளனர்.

சாதாரணமாக கட்சி மாறுபவர்கள் தங்களின் எம்.எல்.ஏ பதவியைக் காப்பாற்றிக் கொள்ளப் பார்ப்பார்கள். ஆனால், இங்கு அவர்கள் தங்களின் பதவிகளைத் தூக்கியெறிந்துவிட்டு, மக்களின் மறுதேர்தலைச் சந்திக்கத் தயாராக வந்துள்ளனர்.

கூவத்தூரில் என்ன நடந்தது என்பதை இந்த நாடே அறியும்! அன்று சொகுசு விடுதியில் அடைத்து வைத்து, பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள நடத்தப்பட்ட நாடகங்களை மக்கள் மறக்கவில்லை. ஆனால் இன்று, தார்மீகப் பொறுப்பேற்று, தங்களின் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளையே ராஜினாமா செய்துவிட்டு, மக்கள் மன்றத்தை மீண்டும் சந்திக்கத் துணிவோடு வந்துள்ளார்கள்.

தேர்தலில் மக்கள் உங்களை நிராகரித்துவிட்டார்கள். இப்போது உங்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களே உங்களை நிராகரித்து வருகிறார்கள்.

எங்களின் கவனம் முழுவதும் மக்கள் மேம்பாடு மற்றும் தமிழகத்தின் வளர்ச்சியை நோக்கியே உள்ளது!

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருந்து கட்டுப்பாட்டு துறையில் புரையோடிய லஞ்சப்புகார்கள்: கண்டுகொள்ளுமா புதிய அரசு?

கோவை, மே. 26–

மருந்தகங்களில் ஆய்வு என்ற பெயரில், மருந்து கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் மாதந்தோறும் வசூல் வேட்டை நடத்துவதை தடுக்கவும், நிர்வாகப் புகார்களுக்கு பிரத்யேக வசதி ஏற்படுத்தி தர வேண்டுமெனவும், மருந்தக உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



தமிழகம் முழுக்க 7 லட்சத்திற்கும் மேற்பட்ட மருந்தங்கள் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில், டிப்ளமோ, இளங்கலை அல்லது முதுகலை பார்மஸி முடித்து, தமிழ்நாடு பார்மஸி கவுன்சிலில் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் பெயரில் மட்டுமே, மருந்தகம் நடத்த உரிமம் வழங்கப்படும். யார் உரிமையாளராக இருந்தாலும், உரிமம் பெற்றவரின் நேரடி கண்காணிப்பில் தான், மக்களுக்கு மருந்துகள் வழங்க வேண்டும்.

வீரியமிக்க மருந்துகளை மருத்துவரின் பரிந்துரை சீட்டு இல்லாமல் விற்க கூடாது. மருந்து கொள்முதல் மற்றும் விற்பனை விபரங்களை பதிவு செய்தல் உள்ளிட்ட பல்வேறு விதிமுறைகள், மருந்து கட்டுப்பாடு மற்றும் உணவு பாதுகாப்பு துறையின்கீழ் வகுக்கப்பட்டுள்ளது.

இவை சரியாக பின்பற்றப்படுகிறதா என்பதை கண்காணிக்க மாவட்ட அளவில், மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குனரின் கீழ், மருந்து ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மாதந்தோறும் குறிப்பிட்ட மருந்தகங்களை ஆய்வு செய்ய வேண்டுமென்ற விதிமுறை உள்ளது.

விதிமீறல் நடந்தால், உரிய ஆவணங்களோடு, இயக்குனரகத்தில் விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும். உரிமம் ரத்து செய்வது, கோர்ட்டில் வழக்கு தொடுத்து, அபராதம் முதல் சிறை தண்டனை உள்ளிட்டவை பெற்று தருவது தான், மருந்து ஆய்வாளர்களின் பணி.

ஆனால், பல மருந்து ஆய்வாளர்கள், ஆய்வு என்ற பெயரில், மருந்தகங்களில் நடக்கும் முறைகேடுகளை கண்டு கொள்ளாமல் இருக்க, மாதந்தோறும் குறிப்பிட்ட தொகை லஞ்சமாக பெறுவதாக புகார் எழுந்துள்ளது. ஆவணங்களை சரியாக வைத்திருப்போரும், கப்பம் கட்டினால் தான், நிம்மதியாக தொழில் நடத்த முடியும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக, சிலர் குமுறுகின்றனர்.

இதுகுறித்து கோவையை சேர்ந்த மருந்தக உரிமையாளர் ஒருவர் கூறுகையில்,' மருந்தகங்களில் மாதந்தோறும் வசூல் செய்வது, தொடர்ந்து பல ஆண்டுகளாக நடக்கிறது. ஆட்சி மாறினாலும் இக்காட்சி மாறுவதில்லை. சில நேர்மையான அதிகாரிகள் இதை அறிந்தும் தவறு செய்பவர்களை கண்டிப்பதில்லை. ஒரு மருந்தகத்திற்கு குறைந்தபட்சம், ரூ 5 ஆயிரம் என வைத்து கொண்டால் கூட, தமிழகம் முழுக்க உள்ள 7 லட்சத்திற்கும் மேற்பட்ட மருந்தகங்களில் மாதந்தோறும் கோடிக்கணக்கான பணம் வசூலிக்கப்படுகிறது.

முந்தைய ஆட்சிகளில், அமைச்சர் முதல் மாவட்ட நிர்வாகிகள் வரை, இவ்வசூலில் பங்கு பிரித்து கொண்டனர். தற்போதைய புதிய ஆட்சியில் நேர்மையான, வெளிப்படையான நிர்வாகம் இருக்கும் என எதிர்பார்க்கிறோம். முதல்வரும், புதிய அமைச்சரும், புரையோடிப்போன பழைய நடைமுறைகளை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மருந்தகங்கள் மீது மக்களும், அதிகாரிகள் மீது மருந்தக உரிமையாளர்களும், அச்சமின்றி புகார் அளிக்க, பிரத்யேக புகார் எண், இ–மெயில் முகவரி உருவாக்கி, அதை அமைச்சரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கண்காணிக்க வேண்டும்,' என்றார்.



# வீட்டில் நிம்மதி வேண்டுமா..?




வாஸ்து சாஸ்திரத்தின் படி, வீடு கட்டுவது முதல் வீட்டை சுத்தம் செய்வது வரை பல விதிகள் பின்பற்றப்படுகின்றன. குறிப்பாக வீட்டை துடைக்கும் நேரமும் நாளும் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. சரியான முறையில் துடைப்பது வீட்டில் நேர்மறை ஆற்றலை அதிகரிக்கும் என்றும், தவறான நேரத்தில் துடைப்பது எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் நம்பப்படுகிறது.

வாஸ்து நிபுணர்களின் கூற்றுப்படி, வாஸ்து சாஸ்திரம் படி, வீட்டை துடைக்க சிறந்த நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. இது சூரிய உதயத்திற்கு சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பு வரும் நேரமாகும்.

இந்த நேரத்தில் துடைப்பது வீட்டில் நேர்மறை ஆற்றலை அதிகரித்து அமைதியும் மகிழ்ச்சியும் தரும் என நம்பப்படுகிறது. அதேபோல் சூரிய உதயத்திற்குப் பிறகும், நண்பகலுக்கு முன்பும் துடைப்பதும் மங்களகரமானதாக கருதப்படுகிறது.

ஆனால் சில குறிப்பிட்ட நாட்களில் வீட்டை துடைப்பதை தவிர்க்க வேண்டும் எனவும் கூறப்படுகிறது. குறிப்பாக வியாழக்கிழமைகளில் துடைப்பது குரு பகவானை கோபப்படுத்தும் என்றும், இது வீட்டில் குறைபாடுகள் மற்றும் தடைகளை ஏற்படுத்தும் என்றும் ஜோதிட நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

அதேபோல் ஏகாதசி நாளில் வீட்டை சுத்தம் செய்வது குடும்பத்தில் எதிர்மறை விளைவுகளை அதிகரிக்கக்கூடும் எனவும் நம்பப்படுகிறது.

துடைப்பதற்கான சரியான நேரத்தைப் பற்றி பேசும் போது, மதியம் நேரத்தில் துடைப்பதை தவிர்க்க வேண்டும் எனவும் கூறப்படுகிறது. காரணம், அந்த நேரத்தில் சூரியன் உச்சத்தில் இருப்பதால் வீட்டிற்குள் நுழையும் நேர்மறை ஆற்றல் குறையும் என நம்பப்படுகிறது. அதேபோல் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு வீட்டை துடைப்பதும் தவிர்க்கப்பட வேண்டும் என கூறப்படுகிறது. இது வீட்டில் எதிர்மறை ஆற்றலை அதிகரிக்கும் என வாஸ்து நம்பிக்கைகள் தெரிவிக்கின்றன. இதனால், வீட்டை துடைக்கும் நேரம் மற்றும் நாளை சரியாக பின்பற்றினால் வீட்டில் செழிப்பு, அமைதி மற்றும் மகிழ்ச்சி அதிகரிக்கும் என நம்பப்படுகிறது.

## சினிமா துளிகள்..!

# சிம்பு ரசிகர்களுக்கு சரவெடி அப்டேட்!



இயக்குநர் வெற்றிமாறன் இயக்கத்தில் நடிகர் சிலம்பரசன் நடித்து வரும் படம் 'அரசன்'. இப்படம் ஒரு வடசென்னையில் நடக்கும் கேங்ஸ்டர் திரைப்படமாக உருவாகி வருகிறது.

இப்படத்தில், விஜய் சேதுபதி, சமுத்திரக்கனி, கிஷோர், பிரியங்கா மோகன், யோகி பாபு, ஆண்ட்ரியா, இயக்குநர் நெல்சன் உள்ளிட்டோர் நடித்து வருகின்றனர். கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தை தீபாவளி பண்டிகைக்கு வெளியிட திட்டமிடப்பட்டு அதற்கான பணிகளும் நடைபெற்று வருகிறது. தற்போது ECR கடற்கரைப் பகுதியில் பிரம்மாண்டமான 'வடசென்னை' செட் ஒன்றை அமைத்துள்ளனர். இதில் நடிகர்கள் சிம்பு, விஜய் சேதுபதி மற்றும் அமீர் ஆகிய மூவரும் இணைந்து நடிக்கும் காட்சிகள் படப்பிடிப்பு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. முன்னதாக ரியங்கா மோகன் தொடர்பான காட்சிகள் படமாக்கப்பட்டது.

# மதுரை சிம்மக்கல் தெரு ஸ்ரீ சக்திவேல் முருகன் கோவில் வைகாசி விசாக விழா!

மதுரை, மே. 26–

மதுரை சிம்மக்கல் தெரு அருள்மிகு ஸ்ரீ சக்திவேல் முருகன் கோவில் வைகாசி விசா 86 –வது ஆண்டு வைரவிழா மே 30 ,31தேதிகளில் நடைபெற உள்ளது . விழாவை முன்னிட்டு பால் குடம் எடுக்கும் பக்தர்கள் சிம்மக்கல் ஸ்ரீ சக்தி வேல் முருகன் கோவிலில் இருந்து புறபட்டு அனுமன் கோவில் படித்துறையில் பால்குடம் கட்டி புறப்பட்டு சிம்மக்கல் ஸ்ரீ சந்தன மாரியம்மன் கோயிலை வலம் வந்து கீழமாசிவீதி .தெற்கு சித்திரை வீதி வழியாக திருப்பரங்குன்றம் சென்று அங்கு திருப்பரங்குன்ற முருகனுக்கு அபிஷேகம் நடைபெற உள்ளது .மேலும் மே 31 ந் தேதியன்று சிம்மக்கல் ஸ்ரீ சக்தி வேல் முருகன் கோயில் முருகனுக்கு அபிஷேக ஆராதனையும் நடைபெறஉள்ளது . விழாவிற்கான ஏற்பாடுகளை சிம்மக்கல் ஸ்ரீ சக்தி வேல் முருகன் கோவில் பாலசண்முகானந்த பக்தர்கள் செய்து வருகின்றனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## காலையில் நீங்கள் பூரி, வடை சாப்பிடுபவரா? இந்த விஷயங்கள் தெரிந்தால், ஷாக் ஆயிடுவீங்க..!



மாறிவரும் வாழ்க்கை முறை, காலை நேர அலுவலக அவசரம் மற்றும் வீட்டு வேலைகளின் சுமை ஆகியவற்றின் காரணமாக, பலர் காலை உணவு ஏதும் உண்ணாமலேயே வீட்டை விட்டு வெளியேறுகின்றனர். வேறு சிலர், சுவையான பூரி, வடை, பிரட்–ஜாம் போன்ற உணவுகளை உண்டு தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்கின்றனர். இருப்பினும், காலையில் முறையான காலை உணவை உட்கொள்ளாமல் இருப்பதோ அல்லது ஆரோக்கியமற்ற உணவுகளை உண்பதோ எதிர்காலத்தில் தீவிர உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

மருத்துவரிடம் செல்ல வேண்டிய அவசியமின்றி, உங்களை முழுமையாக ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும் சில முக்கியமான காலை உணவு விதிகள் மற்றும் அதிர்ச்சியூட்டும் உண்மைகளை இப்போது அறிந்துகொள்வோம்.

**நீங்கள் பூரி மற்றும் வடை சாப்பிடுபவரா?**

காலையில் சிற்றுண்டிச் சாலைகளில் (tiffin centers) பலர் உண்ணும் பூரி மற்றும் வடைகளில், அதிகப்படியான கலோரிகள் மற்றும் நிறைவுற்ற கொழுப்புகள் (saturated fats) நிறைந்துள்ளன. பொதுவாக, ஒரு தட்டு பூரி அல்லது வடை சாப்பிடுவது உடலுக்கு சுமார் 500 முதல் 600 கூடுதல் கலோரிகளைச் சேர்க்கிறது. இவை நாக்கிற்கு அற்புதமான சுவையையும், மனதிற்குத் தற்காலிகத் திருப்தியையும் அளித்தாலும், நீண்ட கால அடிப்படையில் இவை அதிகப்படியான உடல் எடை அதிகரிப்பு, கொலஸ்ட்ரால் படிதல் மற்றும் வயிறு சார்ந்த பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றன. அதனால்தான், காலையில் எண்ணெயில் பொரித்த இத்தகைய உணவுகளைத் தவிர்ப்பதே சிறந்தது.

**முழுமையான ஆரோக்கியத்திற்கான சமச்சீரான காலை உணவு**

ஆரோக்கியமான வாழ்விற்கு, நாம் உண்ணும் காலை உணவு எப்போதும் சமச்சீரானதாக இருக்க வேண்டும். காலை உணவுத் திட்டமானது, வெறும் கார்போஹைட்ரேட்டுகளை (மாவுச்சத்து) மட்டும் கொண்டிருக்காமல், உடலுக்குத் தேவையான புரதம், நார்ச்சத்து மற்றும் நல்ல கொழுப்புகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். உதாரணமாக... காலையில், ஆவியில் வேகவைத்த இட்லி அல்லது குறைந்த எண்ணெயில் சமைத்த தோசையுடன்... பல்வேறு வகையான காய்கறிகள் மற்றும் பருப்புகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சாம்பாரை உண்பது, உடலுக்குத் தேவையான முழுமையான ஊட்டச்சத்துக்களை வழங்கும். பிரட் மற்றும் ஜாம் சாப்பிடுவது 'இன்சுலின் எதிர்ப்புத் திறனை' (Insulin Resistance) அதிகரிக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

நேரமின்மை காரணமாக, பலர் தங்கள் வீடுகளில் பிரட் துண்டுகளின் மீது ஜாம் தடவிச் சாப்பிடுகின்றனர். ஆனால், முறையான ஊட்டச்சத்துக்கள் ஏதுமில்லாத, மைதா மற்றும் சர்க்கரை போன்ற தேவையற்ற கலோரிகளை மட்டுமே கொண்ட பிரட்–ஜாம் அல்லது கார்போஹைட்ரேட் உணவுகளை உண்பது, உடலில் இன்சுலின் எதிர்ப்புத் திறனை அதிகரிக்கிறது. இது வெளிப்புறத்தில் வெறும் உடல் எடை அதிகரிப்பு அல்லது தொப்பை கொழுப்பாக மட்டுமே தெரிந்தாலும், உடலின் முக்கிய உறுப்புகள் மற்றும் ஹார்மோன் சமநிலையில் இது தீவிரமான உள்விளைவுகளை ஏற்படுத்துகிறது என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். இது எதிர்காலத்தில் நீரிழிவு நோய்க்கு (சர்க்கரை நோய்) வழிவகுக்கக்கூடும்.

**செரிமானத்திற்குச் சிறந்த அமிர்தம் மோர்**

நமது செரிமான மண்டலத்தை மேம்படுத்தவும், குடல் ஆரோக்கியத்தைப் பராமரிக்கவும் 'புரோபயாடிக்குகள்' (Probiotics) மிகவும் அவசியமானவை. அதனால்தான், காலை உணவு உண்ட ஒரு மணி நேரத்திற்குப் பிறகோ அல்லது மதிய நேரத்திலோ, ஒரு குவளைத் தூய மோரை அருந்துவதை நாம் ஒரு பழக்கமாகக் கொள்ள வேண்டும். இது உடலுக்குத் தேவையான 'லாக்டோபேசிலஸ்' (Lacto–bacillus) போன்ற நன்மை பயக்கும் பாக்டீரியாக்களை வழங்குகிறது. இது வாயு மற்றும் அமிலத்தன்மை சார்ந்த பிரச்சனைகளைக் குறைப்பது மட்டுமல்லாமல், உடல் வெப்ப நிலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், நாள் முழுவதும் உடலுக்குச் சிறந்த ஆற்றலை அளிக்கவும் உதவுகிறது.

**நீங்கள் பழச்சாறு அருந்துபவரா?**

பழச்சாறு அருந்துவது ஒரு ஆரோக்கியமான பழக்கம் என்று கருதி, பலர் காலையில் பழச்சாறுகளை அருந்துகின்றனர். ஆனால் ஊட்டச்சத்து நிபுணர்களின் கூற்றுப்படி, இது சரியான முறையாகாது. பழங்களைச் சாறாக அரைக்கும்போது, அவற்றில் உள்ள மிக முக்கியமான சத்தான 'நார்ச்சத்து' (Fiber) முழுமையாக நீக்கப்பட்டுவிடுகிறது. இறுதியில், அதில் இயற்கையான சர்க்கரையான 'ஃப்ரக்டோஸ்' (Fructose) மட்டுமே எஞ்சியிருக்கும். நீங்கள் இந்தச் சாற்றை அருந்தும்போது, இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு திடீரென அதிகரிக்கிறது. எனவே, பழங்களைச் சாறு வடிவில் அருந்துவதை விட, அவற்றைச் சிறு துண்டுகளாகவே உண்பது எப்போதும் சிறந்தது. இருப்பினும், உங்கள் உடல்வாகிற்கு ஏற்றவாறு உங்கள் உணவுமுறையில் ஏதேனும் புதிய மாற்றங்களைச் செய்வதற்கு முன், உங்கள் குடும்ப மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது.

## EPFO உறுப்பினர்கள் கவனத்திற்கு..! மத்திய அரசு முக்கிய அறிவிப்பு..!!

புதுடெல்லி, மே. 26–

EPFO தனது இணைய வழிச் சேவைகளை மேலும் விரிவுபடுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, EPFO சமீபத்தில் மற்றொரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது தவறுதலாகப் பதிவு செய்யப்பட்ட ஒரு 'உறுப்பினர் அடையாள எண்ணை' (Member ID) நீங்கள் மிக எளிதாக நீக்கிக்கொள்ளலாம். நிறுவனங்கள் தவறுதலாக உங்கள் UAN எண்ணை வேறொரு நிறுவனத்துடனோ அல்லது தவறான உறுப்பினர் அடையாள எண்ணுடனோ இணைத்திருந்தால், அதை நீங்கள் கண்டறிந்து, சில நிமிடங்களிலேயே அந்த இணைப்பை நீக்கிக்கொள்ள முடியும். EPFO–வின் அதிகாரப்பூர்வ இணையதளத்திற்குச் சென்று நீங்கள் இந்த இணைப்பை நீக்கிக்கொள்ளலாம்.




## டெல்லியில் காவிரி மேலாண்மை ஆணைய கூட்டம்!



புதுடெல்லி, மே. 26–

காவிரி நதி நீரை சுமுகமான முறையில் பகிர்ந்து கொள்வதற்காக சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்பேரில் காவிரி மேலாண்மை ஆணையமும், காவிரி ஒழுங்காற்றுக்குழுவும் அமைக்கப்பட்டது. இந்த 2 அமைப்புகளும் அவ்வப்போது கூடி நதிநீர் பிரச்சினைகளில் சமரச தீர்வை கண்டு வருகிறது. இந்த வகையில் காவிரி மேலாண்மை ஆணைய கூட்டம் இதுவரை 50 முறை நடந்துள்ளது. 51–வது கூட்டம் வருகிற 28–ந்தேதியன்று நடத்த திட்டமிடப் பட்டு இருந்தது.

இந்தநிலையில் இந்த கூட்டத்தை அதற்கு முன்னதாக நடத்த முடிவு செய்து இன்று (செவ்வாய்க்கிழமை) நடத்துவதாக மேலாண்மை ஆணையம் அறிவித்து உள்ளது. இது தொடர்பாக தமிழகம், கர்நாடகம், புதுச்சேரி மற்றும் கேரளா ஆகிய 4 மாநிலங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது. கூட்டம் நேரடியாகவும், காணொலி வாயிலாக வும் நடைபெறும்.

இந்த கூட்டத்தில் மேகதாது அணை விவகாரம் பற்றி பேசப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் கூட்டம் மீதான எதிர்பார்ப்பு மேலோங்கி இருக்கிறது.

## 10-ம் வகுப்பு துணைத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்!



சென்னை, மே. 26–

தமிழகத்தில் 10–ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் கடந்த 20–ந்தேதி வெளியானது. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் 10–ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளை ஆன்லைனில் அவர் வெளியிட்டார். இதில் 94.31 சதவீத மாணவ–மாணவிகள் தேர்ச்சி பெற்றனர். இந்நிலையில் 10–ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுத வராத, தோல்வி அடைந்த மாணவ–மாணவிகளுக்கான துணைத்தேர்வு ஜூலை மாதம் 8–ந்தேதி முதல் 15 வரை நடைபெற உள்ளது. துணைத்தேர்வுக்கு பள்ளி மாணவர்கள் தாங்கள் படித்த பள்ளிகள் வாயிலாகவும், தனித் தேர்வர்கள் அரசு தேர்வுகள் இயக்கக சேவை மையங்களிலும் இன்று முதல் அடுத்த மாதம் (ஜூன்) 9–ந் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.



பழனி ரெண காளியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, பழனி ஸ்ரீ ரெணகாளியம்மன் சித்ரா பவுர்ணமி தீர்த்த காவடி குழு நிர்வாகி, நாகா டைலர் நாகராஜன் மற்றும் குழு நிர்வாகிகள் சார்பாக, 23ஆம் நாள் மண்டல பூஜை நடைபெற்றது. இதில் 300க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனின் அருள் பெற்று சென்றனர். விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகி காணியாளர் செல்வராஜ் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

## பணிக்கு வராமல் சம்பளம் பெற்ற தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு கிடுக்கிப்பிடி!




விருதுநகர், மே. 26–

அரசு போக்குவரத்து கழகங்களில் தி.மு.க., தொழிற்சங்க நிர்வாகிகளில் பலர் மாற்றுப்பணி, மருத்துவ விடுப்பு பெற்று சரிவர பணிக்கு வருவதில்லை. இவ்வாறு மாற்றுப்பணி, மருத்துவ விடுப்பில் சென்றவர்களை மீண்டும் பணிக்கு வர அந்தந்த பணிமனை நிர்வாகங்கள் அறிவுறுத்தியுள்ளன.

தமிழக அரசு போக்குவரத்து கழகங்களில் தி.மு.க., ஆட்சியின் போது அக்கட்சியின் தொழிற்சங்க நிர்வாகிகளில் பலர் மாற்றுப்பணி, மருத்துவ விடுப்பு பெற்று பணிக்கு வருவதில்லை. ஆனால் சம்பளம் மட்டும் முழுமையாக பெற்று வந்தனர். உண்மையிலேயே மாற்றுப்பணி, மருத்துவ விடுப்பு தேவைப்படுபவர்கள் அவற்றை போராடி பெற வேண்டிய நிலை இருந்தது. தற்போது த.வெ.க., ஆட்சி அமைந்தும் முறையான ஆவணங்கள் இல்லாமல் மாற்றுப்பணி, மருத்துவ விடுப்பில் சென்ற தி.மு.க., தொழிற்சங்க நிர்வாகிகள் பலரை மீண்டும் பணிக்கு வர அந்தந்த பணிமனை நிர்வாகங்கள் அறிவுறுத்தியுள்ளன. இதில் பணிக்கு திரும்பியவர்களில் பலருக்கு 'தொழில்' மறந்துவிட்டது. டிப்போ உள்ளே பஸ்களை இயக்கும் போதே விபத்துகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இருப்பினும் அவர்கள் கட்டாயம் ரெகுலர் பணிக்கு செல்ல நிர்வாகங்கள் கடுமை காட்டி வருகின்றன.




அம்மா மக்கள் முன்னேற்றக் கழக திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளராக புதிதாக பொறுப்பேற்ற இறை ஆர் வெங்கடேஷ் அவர்கள் கழகத் துணை பொது செயலாளர் முன்னாள் அமைச்சர் உடுமலை சி சண்முகவேலு அவர்களை உடுமலையில் உள்ள அவரது அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்துக்களை பெற்றார் உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம், பச்சூர் கிராமத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளி நபர் திரு.வெங்கடேசன் த/பெ சின்னப்பசெட்டி (லேட்) மற்றும் நாட்றம்பள்ளி வட்டம் மூக்கனூர் ஊராட்சியை சேர்ந்த ஆதரவற்ற திருமதி.சபியா க/பெ பெருமாள் (லேட்) என்பவர் ஆகியோர் கடந்த மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் இலவச வீட்டு மனை பட்டா வேண்டும் என கோரிக்கை மனு அளித்ததன் அடிப்படையில், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வெங்கடேசன் மற்றும் சபியா ஆகியோருக்கு இலவச வீட்டு மனை பட்டாகளை மாவட்ட ஆட்சியர் திருமதி.க.சிவசௌந்திரவல்லி வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ.நாராயணன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.பூஷணகுமார், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) திரு.மகாதேவன், (வடக்கு) திரு.முருகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.தணிகாசலம், உதவி ஆணையர் (கலால்) திரு.வேடியப்பன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு.முருகேசன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.தாமரைமணாளன், அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## விலை ஏற்றம் நிற்குமா? 12 நாட்களில் 4-வது முறையாக உயர்ந்த CNG..!

சென்னை, மே. 26–

CNG விலை மீண்டும் ஒருமுறை உயர்த்தப்பட்டுள்ளன. கடந்த 12 நாட்களில் மட்டும், விலைகள் உயர்த்தப்படுவது இது 4–வது முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று (செவ்வாய்க்கிழமை, மே 26) ஒரு கிலோ CNG–யின் விலை மேலும் ரூ. 2 உயர்ந்துள்ளது. தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் இந்த விலை உயர்வுகளின் தாக்கத்தால், தலைநகரில் ஒரு கிலோ CNG–யின் புதிய விலை தற்போது ரூ. 83.09–ஐ எட்டியுள்ளது. சர்வதேச சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை உயர்வு மற்றும் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக, இந்த விலை உயர்வு தவிர்க்க முடியாததாகி விட்டது என்று எரிசக்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.




## பழனி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் புகார்!

பழனி மே 26 –

பழனி ஆர்டிஓ அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. இதற்கு தாசில்தார் ரவி தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் கௌசல்யா தேவி, தோட்டக்கலை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, பொதுப்பணி துறை அலுவலர் சங்கரநாராயணன், மற்றும் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர். அவர்கள் கூட்டத்தில் கூறியதாவது:

கீரனூர் பகுதியில் வாய்க்கால் கரையை உடைத்து தண்ணீர் எடுத்துச் செல்வதை தடுக்க வேண்டும் என்றும். வரதமா நதி அணை தொடர்புடைய குளங்களில் தண்ணீர் வராததால் விளை நிலங்கள் தரிசாகும் நிலை உள்ளது. எனவே நீர் வரும் வாய்க்கால்களை தூர்வார வேண்டும். நீர்நிலைகளில் இருந்து விவசாய பயன்பாட்டிற்கு மட்டும் வண்டல் மண் எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும். செங்கல் சூளைகளுக்கு மண் எடுப்பதை கண்காணித்து தடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்

## வேலை வாய்ப்பு

## இந்திய இராணுவத்தில் 190 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: இந்திய ராணுவம்
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 190
சி.எஸ்.பி.ஓ (சிவிலியன் ஸ்விட்ச் போர்டு ஆபரேட்டர்) முதல் கிரேடு–II, குரூப் 'சி' பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 02.05.2026, நள்ளிரவு 12.01 மணி
கடைசி தேதி: 31.05.2026, இரவு 11.59 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://indianarmy.nic.in/

## ஏறிய வேகத்தில் இறங்கிய தங்கம் விலை!



சென்னை, மே. 26–

தங்கம் விலை ஏறிய வேகத்தில் இன்று குறைந்துள்ளது. சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400 குறைந்து ரூ.1,17,840–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 குறைந்து ரூ.14,730–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.295–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 95 ஆயிரத்திற்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## பழனியில் சிறுவர்களுக்கான கால்பந்து போட்டி பரிசளிப்பு விழா!



பழனி, மே 26–

பழனி இட்டேரி சாலையில் மங்கள கவுண்டர் திடலில், ஏ என் ஸ்போர்ட்ஸ் அகாடமி மற்றும் தமிழக வெற்றிக் கழகம் இணைந்து 14 வயதுக்கு உட்பட்ட ஐவர் கால்பந்து போட்டிகளை நடத்தினர். போட்டிகளை ஏ என் ஸ்போர்ட்ஸ் இயக்குனர் அதிதினிஷா அஸ்வினி, தனுஜாபேகம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் எட்டு வயது, 11 வயது, 14 வயது என மூன்று பிரிவு போட்டிகளில் சிறுவர் சிறுமியர்கள் பங்கேற்றனர். இப்போட்டியில் பழனி ஏ என் ஸ்போர்ட்ஸ் அகாடமி முதலிடம் பெற்றது. மன்னார்குடியைச் சேர்ந்த கலாம் அகாடமி இரண்டாம் இடத்தையும், திருப்பூர் எஸ் எஃப் ஏ டி அணி 11 வயது பிரிவில் முதலிடம் பெற்றது. இரண்டாவது இடத்தை அன்னை அகாடமி ஸ்போர்ட்ஸ் பெற்றது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு தமிழக வெற்றி கழக மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா, செயற்குழு உறுப்பினர் பழனிபாலன், மாவட்ட இணை செயலாளர் சிவா, பயிற்சியாளர் பாலாஜி, ஆகியோர் பங்கேற்று பரிசுகள் வழங்கினார்கள்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# நாட்டின் எல்லை பகுதிகளில் மத்திய மந்திரி அமித்ஷா ஆய்வு!



புதுடெல்லி, மே. 26–
மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா அடுத்த 2 வாரங்களில், நாட்டின் எல்லை பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு பாதுகாப்பு விசயங்களை ஆய்வு செய்கிறார். அப்போது அவர், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் மூத்த எல்லை பாதுகாப்பு படை (பி.எஸ்.எப்.) அதிகாரிகள் ஆகியோருடன் உரையாட உள்ளார்.

இதன்படி, அவர் பிகானீர் பகுதிக்கு இன்று செல்கிறார். அவர் எல்லை பாதுகாப்பு பற்றி, மூத்த அதிகாரிகளுடன் சேர்ந்து மறுஆய்வு செய்வார். இந்த கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் பிரதிநிதிகள் மற்றும் பாகிஸ்தானுடன் எல்லையை பகிரக்கூடிய 5 மாவட்டங்களை சேர்ந்த மூத்த அதிகாரிகள் பங்கு பெறுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதன்பின்னர், சஞ்சு பகுதியிலுள்ள பி.எஸ்.எப். எல்லை முகாம் பகுதிக்கு மே. 26–ல் செல்ல இருக்கிறார்.

# அம்பாசமுத்திரம் எம்.எல்.ஏ. இசக்கி சுப்பையா, அதிமுகவில் இருந்து விலகல்?



சென்னை, மே. 26–
அதிமுக சார்பில் அம்பாசமுத்திரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இசக்கி சுப்பையா, அதிமுகவில் இருந்து விலக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், அவர் தவெகவில் இணைய உள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. எனினும், அதிகாரப்பூர்வ தகவல்கள் ஏதும் இன்னும் வெளியாகவில்லை. இதனால் தமிழகத்தில் பரபரப்பான அரசியல் சூழல் நிலவி அருகிறது.

**யார் இந்த இசக்கி சுப்பையா.?**

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் அதிமுக சார்பில் அம்பாசமுத்திரத்தில் போட்டியிட்டவர் இசக்கி சுப்பையா. இதில் காங்கிரஸ் மற்றும் தவெக வேட்பாளர்களை பின்னுக்கு தள்ளி 10,245 வாக்குகள் வித்தியாசத்தி வெற்றி பெற்றார்.

இவர் ஏற்கெனவே 2011 மற்றும் 2021 சட்டசபை தேர்தலிலும் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். 2011ல் அப்போது முதல்–அமைச்சர் ஜெயலலிதா இவருக்கு அமைச்சர் பதவியை வழங்கி இருந்தார். இவர் அம்பாசமுத்திரம் தொகுதி மக்களிடையே நல்ல செல்வாக்கு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# த.வெ.க.வில் இணைய திட்டமா? சி.வி.சண்முகம் காட்டமான பதில்!



சென்னை, மே. 26–
அ.தி.மு.க.வில் எஸ்.பி. வேலுமணி, சி.வி.சண்முகம் அணியில் இருந்து 5 எம்.எல்.ஏ.க்கள் மாறி எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவு தெரிவித்தனர். மேலும் 3 எம்.எல்.ஏ.க்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்தனர்.

இந்த நிலையில் நேற்று மாலை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் சென்னை யில் எம்.ஆர்.சி. நகரில் உள்ள அவரது வீட்டில் இருந்து வெளியே வந்தபோது பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். உங்கள் தரப்பு 3 எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா, 5 எம்.எல்.ஏ.க்கள் அணி மாறியது ஏன்? என கேள்வி கேட்டனர். அதற்கு அவர், 'இது தொடர்பாக பிறகு விரிவாக பதில் சொல்கிறேன்' என்றார். தொடர்ந்து அவர் காரில் ஏறி அமர்ந்து புறப்பட தயாரானார்.

தவெகவில் இணையும் திட்டம்

அவரிடம், 'உங்கள் தரப்பில் எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை 25–ல் இருந்து 17 ஆக குறைந்துள்ளதே' என கேட்டனர். அதற்கு அவர் பதில் அளிக்கையில் 25 எண்ணிக்கை 35 ஆகக்கூட மாறலாம். அதற்கு எவ்வளவு நேரம் ஆகப்போகிறது' என்றார். தொடர்ந்து, 'நீங்களும் த.வெ.க.வில் இணைய வாய்ப்பு இருக்கிறதா? என நிருபர்கள் கேட்டபோது. 'தேவையில்லாத கேள்வி கேட்க வேண்டாம்' என காட்டமாக பதில் அளித்துவிட்டு காரில் புறப்பட்டு சென்றார்.

# அன்னியச் செலாவணியை சேமிக்க நிர்மலா சீதாராமன் வலியுறுத்தல்!



மும்பை, மே 26–
அன்னியச் செலாவணியைச் சேமிக்குமாறு பிரதமர் நரேந்திர மோடி விடுத்த வேண்டுகோள் மிகவும் முக்கியமானது என்று மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். மும்பையில் நடைபெற்ற இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (சிட்பி) நிறுவனத் தின விழாவில் பேசும்போது அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் "சர்வதேச சந்தையில் நிலவும் குழப்பமான சூழலை கையாள்வதற்காகவே பிரதமர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இதன் மூலம் இந்தியாவின் அன்னியச் செலாவணியை சேமித்து, ரூபாய் பலத்தை பாதுகாத்து, பொருளாதாரத்தை இன்னும் வலுவாக வைத்திருக்க முடியும்" என்று அவர் தெளிவுபடுத்தினார்.

# பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து 5-வது முறையாக உயர்வு!




புதுடெல்லி, மே. 26–
கடந்த இரண்டு வாரங்களில் பெட்ரோல், டீசல் விலை 5–வது முறையாக உயர்த்தப்பட்டுள்ளதால், வாகன ஓட்டிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அமெரிக்கா – இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மேற்காசிய போர் காரணமாக உலக அளவில் எரிவாயு விநியோகம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா – ஈரான் இடையிலான கடுமையான சண்டை காரணமாக கச்சா எண்ணெய் சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தாலும், போரின் தாக்கம் இன்னும் குறையாத நிலையில், உலக எரிசக்தி வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஹோர்மூஸ் நீரிணை வழியாகச் செல்லும் சரக்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டதன் விளைவாக கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. இதனால், அதிக மக்கள்தொகை கொண்ட இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் 4 ஆண்டுகளாக பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படாமல் இருந்த நிலையில், கடந்த மே 15 ஆம் தேதி பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது. அதைத்தொடர்ந்து மே 15, 19, 23 மற்றும் நேற்று (மே 25) என நான்கு முறை பெட்ரோல், டீசல் விலையை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தின.

இந்த நிலையில், கடந்த இரண்டு வாரங்களில் 5–வது முறையாக இன்று (மே 26) காலை சென்னையில் பெட்ரோல், டீசல் விலை மீண்டும் உயர்த்தப்பட்டது. இதனால், வாகன ஓட்டிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையில், பெட்ரோல் விலை லிட்டருக்கு 24 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.108.01–க்கும், டீசல் விலை லிட்டருக்கு 23 காசுகள் உயர்ந்து ரூ.99.78–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# திரையரங்குகளில் இனி 5 காட்சிகள்..!




சென்னை, மே. 26–
1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு சினிமா (ஒழுங்குமுறை) விதி 14–ஏ பிரிவின் கீழ், திரையரங்குகள் ஒரு நாளைக்கு நான்கு வழக்கமான காட்சிகளை திரையிட்டு வருகிறது.

ஐந்தாவது சிறப்புக் காட்சி உள்ளூர் பண்டிகை நாட்களிலும், மாவட்ட ஆட்சியர்கள் அல்லது சென்னை காவல் ஆணையர் ஒப்புதலுடன் பொது விடுமுறை நாட்களிலும் திரையிடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தமிழகத்தில் தினமும் ஐந்து நாள் காட்சிக்கு அனுமதி அளிக்கும்படி, மே 16 அன்று நடந்த கூட்டத்தில் திரையுலக உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து புதிதாக வெளியாகும் தமிழ்த் திரைப்படங்களுக்கு, முதல் ஏழு நாட்கள் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து திரையரங்குகளிலும் ஒரு நாளைக்கு ஐந்து காட்சிகள் திரையிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலகட்டங்களில் கூடுதல் காட்சியை திரையிடுவதற்கு, உரிமம் வழங்கும் அதிகாரிகளிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ திரையரங்கு உரிமையாளர்கள் அனுமதி பெறத் தேவையில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

# இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சு; கனடா பிரதமர் மார்க் கார்னி தகவல்!



ஒட்டாவா, மே. 26–
இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சு நடத்தி வருகிறோம் என கனடா பிரதமர் மார்க் கார்னி தகவல் தெரிவித்தார்.

இந்தியா–கனடா இடையே வர்த்தக ஒப்பந்தம் மற்றும் இருதரப்பு முதலீட்டு வாய்ப்புகள் குறித்துப் பேசுவதற்காக, மூன்று நாட்கள் அரசுமுறை பயணமாக கனடாவுக்கு மத்திய வர்த்தக துறை அமைச்சர் பியூஷ் கோயல் சென்றுள்ளார். அவருடன் 100–க்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்களின் பிரதிநிதிகள் உடன் சென்றுள்ளனர்.

கனடா சென்ற பியூஷ் கோயல் அந்நாட்டு பிரதமர் மார்க் கார்னியை சந்தித்து இருதரப்பு குறித்து உறவு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த புகைப்படத்தை சமூக வலைதளத்தில் பகிர்ந்து கனடா பிரதமர் மார்க் கார்னி கூறியிருப்பதாவது: நாங்கள் இந்தியாவுடன் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். கனடா தொழிலாளர்களுக்கும், வணிகங்களுக்கும் இது ஒரு திருப்புமுனையாக அமையும்

நாங்கள் மிகத் துரிதமாகச் செயல்பட்டு வருகிறோம். இதுவரை எட்டியுள்ள முன்னேற்றங்களை ஆய்வு செய்யவும், எரிசக்தி, வேளாண் உணவு, தொழில்நுட்பம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் நம் இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து இந்திய வர்த்தக துறை அமைச்சர் பியூஷ் கோயலை சந்தித்து பேச்சு நடத்தினேன். இவ்வாறு மார்க் கார்னி கூறியுள்ளார்.

அதேபோல் மத்திய வர்த்தக துறை அமைச்சர் பியூஷ் கோயல் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: கனடா பிரதமரைச் சந்தித்து, பிரதமர் மோடியின் வாழ்த்துகளைத் தெரிவித்தேன். இந்தியா–கனடா உறவில் ஒரு புதிய உத்வேகத்தையும், கனடா பிரதமரின் அண்மைய இந்தியப் பயணத்தை நான் அன்புடன்நினைவுகூர்ந்தேன்.

இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து நாங்கள் தொலைநோக்குச் சிந்தனையுடன் கூடிய கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். மேலும், இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து வரும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து ஆலோசனை நடத்தினோம். இவ்வாறு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

**மிக்க மகிழ்ச்சி**

அதேபோல், கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் அனிதா ஆனந்தை மத்திய வர்த்தக துறை அமைச்சர் பியூஷ் கோயல் சந்தித்து பேச்சு நடத்தினார். இது குறித்து சமூக வலைதளத்தில் அனிதா ஆனந்த் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: மத்திய வர்த்தக துறை அமைச்சர் பியூஷ் கோயலை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி. நமது இரு நாடுகளிலும் உள்ள வணிகங்கள், தொழிலாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் நமது வர்த்தக உறவை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கட்டுக்கடங்காமல் பரவும் எபோலா: 10 ஆப்ரிக்க நாடுகளுக்கு அலெர்ட்!




கின்ஷாஷா, மே. 26–
காங்கோவில் 'எபோலா' வைரஸ் பாதிப்பின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், ஒட்டு மொத்த ஆப்ரிக்க கண்டத்திற்கே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய ஆப்ரிக்க நாடான காங்கோவில் எபோலா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. இது ஒரு தீவிரமான மற்றும் பெரும்பாலும் உயிரிழப்பை ஏற்படுத்தும் நோயாகும். இந்த வைரஸ் உள்ளவர்களின் ரத்தம், வியர்வை, விந்து போன்ற உடல் திரவங்கள் வாயிலாக மற்றவர்களுக்கு பரவுகிறது. தற்போது பரவி வருவது 'புண்டிபுக்யோ' எனப்படும் உருமாறிய எபோலா வைரஸ் ஆகும். இதற்கு இதுவரை அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசியோ, மருந்துகளோ எதுவும் இல்லை. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த உலக சுகாதார அமைப்பு, இதை உலகளாவிய பொது சுகாதார அவசர நிலையாக அறிவித்துள்ளது.

காங்கோவின் அண்டை நாடுகளான அங்கோலா, புருண்டி, எத்தியோப்பியா, கென்யா, ருவாண்டா, தெற்கு சூடான், தான்சானியா, ஜாம்பியா உள்ளிட்ட 10 நாடுகளுக்கு எபோலா பரவும் அபாயம் மிக அதிகமாக இருப்பதாகவும் எச்சரித்துள்ளது. எனவே, நோய் மேலும் பரவாமல் தடுக்க உடனடி மற்றும் ஒருங்கிணைந்த சர்வதேச நடவடிக்கை தேவை என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

எபோலா பரவல் அச்சம் காரணமாக, 4–வது இந்திய –ஆப்ரிக்க கூட்டமைப்பு உச்சி மாநாட்டை மத்திய அரசு ஒத்திவைத்துள்ளது.

மேலும் விமான நிலையங்களிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. எபோலா பாதிப்புள்ள ஆப்ரிக்க நாடுகளில் இருந்து வரும் பயணியர் அல்லது அந்த நாடுகள் வழியாகப் பயணித்து இந்தியா வருபவர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டால், அவர்கள் உடனடியாக விமான நிலைய சுகாதார அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று உத் தரவிடப்பட்டுள்ளது. கிழக்கு காங்கோவின், இடூரி மாகாணத்தில் எபோலா வைரஸ் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 900–ஐ கடந்துள்ளது. காங்கோ தகவல் தொடர்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவல்படி, எபோலா அறிகுறியுடன் 904 பேரும் பாதிக்கப்பட்டவர்களில், 119 பேர் உயிரிழந்திருப்பதும் தெரிய வந்துள்ளது.

# அலர்ட் மோடில்..! வெளிநாட்டு பயணிகளுக்கு கண்காணிப்பு..!




சென்னை, மே. 26–
காங்கோ ஜனநாயகக் குடியரசு மற்றும் உகாண்டாவில் எபோலா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், உலக சுகாதார அமைப்பு இதை சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பொது சுகாதார அவசரநிலையாக (PHEIC) அறிவித்துள்ளது. இதையடுத்து, இந்தியாவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் (DGCA), அனைத்து விமான நிறுவனங்களுக்கும் கடுமையான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

மே 22–ஆம் தேதி வெளியிடப்பட்ட உத்தரவில், மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் வெளியிட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (SOP) உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக காங்கோ ஜனநாயகக் குடியரசு, உகாண்டா மற்றும் அவற்றை ஒட்டியுள்ள தெற்கு சூடான் போன்ற நாடுகள் "அதிக ஆபத்து மண்டலம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி, அந்த நாடுகளில் இருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்தியா வரும் பயணிகளிடம் கட்டாயமாக சுய அறிவிப்புப் படிவம் பெற வேண்டும் என்று விமான நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பயணிகள் பயணத்திற்கு முன்பே தங்களின் உடல்நிலை விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், விமானப் பயணத்தின் போது எபோலா அறிகுறிகள் குறித்து அறிவிப்புகள் வெளியிட வேண்டும் என்றும் DGCA வலியுறுத்தியுள்ளது.

காய்ச்சல், பலவீனம், தலைவலி, தசை வலி, வாந்தி, வயிற்றுப்போக்கு, தோல் தடிப்பு, இரத்தப்போக்கு போன்ற அறிகுறிகள் இருந்தால், உடனடியாக விமானப் பணியாளர்கள் மற்றும் விமான நிலைய மருத்துவப் பிரிவுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியா வந்த பிறகு 21 நாட்களுக்குள் இந்த அறிகுறிகள் தென்பட்டாலும், பயணிகள் உடனடியாக மருத்துவமனையை அணுகி, விமான நிலைய சுகாதார அலுவலகத்திற்கும் தகவல் அளிக்க வேண்டும் என்று SOP–ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானப் பயணத்தின் போது யாருக்காவது அறிகுறிகள் தென்பட்டால், அவரை மற்ற பயணிகளிடமிருந்து தனிமைப்படுத்தும் வகையில் விமானத்தின் பின்பகுதிக்கு மாற்ற வேண்டும். அந்த பயணிக்காக தனி கழிவறை ஒதுக்க வேண்டும் என்றும், அருகில் அமர்ந்திருக்கும் பயணிகளுக்கு மும்மடங்கு முகக்கவசங்கள் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேபோல், சந்தேகிக்கப்படும் நோயாளியின் முன், பின் மற்றும் பக்கத்தில் உள்ள மூன்று வரிசை இருக்கைகள் காலியாக வைக்கப்பட வேண்டும். விமானம் தரையிறங்கிய உடனே முழுமையான கிருமி நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. சந்தேகத்திற்குரிய பயணியின் இருக்கை எண், அவருக்கு காணப்பட்ட அறிகுறிகள், அருகில் அமர்ந்திருந்த பயணிகளின் விவரங்கள் உள்ளிட்ட தகவல்களை விமான நிலைய சுகாதார அமைப்புடன் உடனடியாக பகிர வேண்டும் என DGCA தெரிவித்துள்ளது.

மேலும், விமானங்களில் முதலுதவி பெட்டிகள், PPE கருவிகள், கை சுத்திகரிப்பான்கள், உயிரியல் அபாய அகற்றல் பைகள், ஒருமுறை பயன்படுத்தும் கையுறைகள், மும்மடங்கு முகமூடிகள் போன்றவை போதுமான அளவில் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஜூனில் வங்கி சேவை எப்போது கிடையாது..!




சென்னை, மே. 26–
ஜூன் 2026 மாதம் தொடங்கவிருக்கிறது. உங்களுக்கு ஏதேனும் முக்கியமான வங்கிச் சேவைகள் தேவைப்பட்டால், முதலில் வங்கி விடுமுறைப் பட்டியலைச் சரிபார்ப்பது மிகவும் அவசியமாகும்.

ஜூன் 7 ஞாயிற்றுக்கிழமை
ஜூன் 13 இரண்டாவது சனிக்கிழமை
ஜூன் 14 ஞாயிற்றுக்கிழமை
ஜூன் 21 ஞாயிற்றுக்கிழமை
ஜூன் 26 முஹர்ரம் (பல மாநிலங்களில்)
ஜூன் 27 நான்காவது சனிக்கிழமை
ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020